செ.வெ.எண்: 23 / ஆகஸ்ட் நாள் : 10.08.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதற்காக நடத்தப்படவுள்ள தொழில்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளில் கலந்து கொள்ள ஆகஸ்ட் 31க்குள் விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக மாற்றுத்திறனாளிகளுக்கு பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதற்காக நடத்தப்படவுள்ள தொழில்திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளில் கலந்து கொள்ள ஆகஸ்ட் 31க்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

மாற்றுத்திறனாளிகளுக்கு பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திடவும், அவர்களின் தொழில்திறனை மேம்படுத்தி வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில் தமிழ்நாடு தொழில்திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனத்தின் விதிமுறைகளைப் பின்பற்றி அந்த நிறுவனத்தில் முறையான பதிவு பெற்ற இராமநாதபுரம் மாவட்ட நிறுவனங்களின் மூலம் 18 வயது நிரம்பிய மேல்நிலைப்பள்ளி தேர்ச்சி / உயர் கல்வி தேர்ச்சி பெற்ற பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் மற்றும் கை, கால் இயக்க குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படவுள்ளது.

விருப்பம் உள்ள தகுதியான மாற்றுத்திறனாளிகள் தங்களது கல்விச்சான்று நகல் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் வரும் ஆகஸ்ட் 31-ஆம் தேதி மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பித்து பயனடையலாம்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**